பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

விலை
ரூபா
6-00

சுடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 கார்த்திகை 07 வியாழக்கிழமை (23-11-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 353

# மற்றொரு அன்ரனோவ் விமானம்

# 60 படையினருடன் வீழ்த்தப்பட்டது!

## பலாலிக்கு 15 கி.மீற்றர் தொலைவில் நேற்று முன்னிரவில் சம்பவம்

சாவகச்சேரி, நவம்பர் 23

ஸ்ரீலங்கா விமானப்படையின் மற்றொரு ''அன்ரனோவ்—32'' ரக விமானம் ஒன்று அறுபது படையினருடன் நேற்று மாலை 6.40 மணியளவில் பலாலி விமான நிலையத்துக்கு 15 கிலோ மீற்றர் தொலைவில் திடீரென காணாமற் போனது.

இந்த விமானம் ஊர்காவற்றுறைக்கு அண்மையில் நிலப்பரப்பில் அல்லது கடலில் வீழ்ந்து நெருங்கியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

நேற்று மாலை இரத்மலானை விமான நிலையத்திலிருந்து ஐம்பது இராணுவத்தினர் ஆறு விமானப்படையினர் மற்றும் நான்கு விமானச் சிப்பந்திகள் ஆகியோருடன் புறப்பட்ட இந்த விமானம், நேற்று மாலை 6-40 மணியளவில் பலாலி விமான நிலையத்தில் இறங்குவதற்குத் தயாரான சமயம் திடீரென ''ராடர்'' திரையிலிருந்து காணாமற் போனதாக அறிவிக்கப்படுகின்றது.

விமானம் வீழ்ந்த இடம் பற்றியோ அல்லது அதிலிருந்த படையினர் மற்றும் விமானச் சிப்பந்திகள் ஆகியோரில் எவரேனும் தப்பி பிழைத்தனரான என்பது பற்றியோ இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை தகவல் ஏதும் வெளியாகவில்லை.

இந்த விமானம் பெரும்பாலும் ஊர்காவற்றுறைக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## படை உயரதிகாரிகளும் விமானத்தில் இருந்தனர்?

நேற்றிரவு காணாமல் போன ''அன்ரனோவ்'' விமானத்தில் பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரிகளும் இருந்திருக்கக் கூடும் எனக் கருதப்படுகின்றது.

நேற்றுக் காலை பாதுகாப்பு அமைச்சில் ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நடைபெற்ற பாதுகாப்பு கவுன்ஸில் மாநாட்டில் வடக்கு யுத்தம் குறித்து விரிவாக ஆராயப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது

அந்த மாநாட்டில் வடக்கு யுத்தம் குறித்து எடுக்கப்பட்ட முடிவுகளைச் செயற்படுத்துவதற்காக, மாலையில் இரத்மலானையிலிருந்து புறப்பட்ட இந்த விமானத்தில் பாதுகாப்பு உயரதிகாரிகள் பயணம் செய்திருப்பர் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் சம்பந்தப்பட்ட விமானத்தில் பயணம் செய்த அதிகாரிகள் பற்றிய விவரம் இச்செய்திஅச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை. (உ)

## பாதுகாப்பு கவுன்ஸிலில் கூடி நிலைமையை ஆராய்ந்தது

கொழும்பு, நவ. 23

பாதுகாப்புக் கவுன்ஸில் ஜனாதிபதி தலைமையில் நேற்றுக் காலை கூடி வடக்கு கிழக்கு நிலைமைகளை ஆராய்ந்தது.

வடக்கில் தீவிரமடைந்துள்ள யுத்த நிலைமைகள் மற்றும் கொழும்பு நகரின் பாதுகாப்பு என்பன குறித்து அதில் நீண்ட நேரம் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை, ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெண்டி, பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சந்திரானந்த டி சில்வா பொலிஸ் மா அதிபர், முப்படைத் தளபதிகள் மற்றும் அமைச்சர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

(ஐ)

## பிந்திய செய்தி

## இந்துமா கடலில் வீழ்ந்தது!

காணாமல்போன ''அன்ரனோவ்'' விமானம் இந்து சமுத்திரப்பகுதியில் வீழ்ந்து நொருங்கியதாகவும்—

புலிகளே அதனைச் சுட்டு வீழ்த்தியிருக்கலாம் என ஸ்ரீலங்கா பாகாப்பு வட்டாரங்கள் கருதுவதாகவும் ''வொய்ஸ் ஒவ் அமெரிக்கா'' வானொலி இன்று காலை அறிவித்தது. (உ)

## இந்த விமானத்தையும் புலிகளே வீழ்த்தினர்?

கொழும்பு, நவ. 23

நேற்றிரவு காணாமல் போன அன்ரனோவ் விமானத்தை விடுதலைப் புலிகளே சுட்டு வீழ்த்தியிருக்க வேண்டும் எனக் கருதப்படுகின்றது.

ஆனால் அது பற்றிய உத்தியோகபூர்வ தகவல்களோ அல்லது விடுதலைப் புலிகள் எப்பகுதியிலிருந்து இத்தாக்குதலை நடத்தினர் என்பது பற்றிய விவரமோ இச்செய்து அச்சுக்குப் போகும்வரை கிடைக்கவில்லை.

கடந்த சனிக்கிழமையன்று பலாலி படைத் தளத்தில் இறங்க முயன்ற சீனச் சகடை விமானத்தை கடலில் இருந்தவாறு விடுதலைப் புலிகள்

(6 ஆம் பக்கம் பார்கக)

## விமானம் வீழ்த்தப்பட்டது படையினருக்குப் பேரிடி!

கொழும்பு, நவ. 23

யாழ்ப்பாணத்தில் பெரும் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டிருக்கும் ஸ்ரீலங்காப் படையினருக்கு அந்நடவடிக்கை உச்சக் கட்டத்தை அடைந்திருக்கும் இவ்வேளையில்— மற்றொரு அன்ரனோவ் விமானத்தை இழந்திருப்பது பேரிடியை ஏற்படுத்தியிருக்கும் என அவதானிகள் கருதுகின்றனர்.

வடபகுதியில் உள்ள படையினருக்கான ஆயுத தளபாடங்கள் மற்றும் பொருள்களை

( 6ஆம் பக்கம் பார்க்க)

## மூன்றாம் ஈழப் போரில் இழந்த 5 ஆவது விமானம்!

சாவகச்சேரி, நவ. 23

நேற்று காணாமல்போன 'அன்ரனோவ்' விமானத்தை விடுதலைப் புலிகளே சுட்டு வீழ்த்தியிருப்பர் எனின் —

கடந்த ஏப்ரல் 19 ஆம் திகதி மூன்றாம் ஈழ யுத்தம் ஆரம்பமான பின்னர் விடுதலைப் புலிகள் வீழ்த்திய ஐந்தாவது விமானமாக அது இருக்கும்.

கடந்த ஏப்ரல் மாதத்திலேயே அடுத்தடுத்து இரு ''அவ்ரோ'' விமானங்களை பலாலிக்கு அருகே புலிகள் சுட்டு வீழ்த்தியிருந்தனர்.

அதன் பின்னர் கடந்த ஜூலை மாதம் ''முன்னேறிப் பாய்தல்'' இராணுவ நடவடிக்கையில் ஸ்ரீலங்காப் படை ஈடுபட்டிருந்த சமயம் சண்டிலிப்பாய் அருகே படையின

( 6 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலிப் போக்குவரத்துக்கு தடை விதித்தது அரசு!

கொழும்பு, நவ. 23

கிளாலி கடல் நீரேரி ஊடான போக்குவரத்து தடை செய்யப்பட்டிருப்பதாக ஸ்ரீலங்கா அரசு அறிவித்திருக்கின்றது.

இது தொடர்பான — அவசரகால சட்ட விதிகளின் கீழான — வர்த்தமானி அறிவித்தல் நேற்று கொழும்பில் வெளியிடப்பட்டது.

நீரேரி ஊடாக போக்குவரத்தில் ஈடுபடுவோர் மீது

(6 ஆம் பக்கம் பார்க்க)

# அரியாலைப் பகுதியில் தொடர்ந்து புலிகள் - படையினர் கடும் சமர்!

## நகரில் கட்டடங்கள் ஷெல்லினால் துவம்சம்

சாவகச்சேரி, நவ. 23

அரியாலைப் பகுதிவரை முன்னேறியுள்ள ஸ்ரீலங்காப் படைகளுடன் விடுதலைப் புலிகள் நேற்றும் தொடர்ந்து கடும் யுத்தம் புரிந்ததாக களத்திலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

படையினர் தொ[illegible] அகோர ஷெல்வீச்சில் ஈடுப[illegible]டிருப்பதாகவும்—

அதனால் நகரில் உள்ள பல சட்டடங்களும், வீடுகளும் தூள் தூளாகியிருப்பதாகவும் [illegible]

நேற்று முன்தினம் மாலையில் அரியாலை கனகரத்தினம் ம.ம.வி. பகுதியில் படையினர் நிலைகொண்டிருந்ததாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

நேற்றுக் காலையில் படையினர் அரியாலைப் பகுதியில் கண்டி வீதியை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பொத்துவிலில் 3பொலீஸார் பலி

கொழும்பு, நவ. 23

பொத்துவில் பொலீஸ் நிலையப் பகுதியில் அமைந்துள்ள காவலரண் ஒன்றின் மீது நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 3 பொலீஸார் கொல்லப்பட்டனர். 31 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்த படையினர் பதுளை, மொனராகலை ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டனர் என்று பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி ''வெரித்தாஸ்'' வானொலி தெரிவித்தது.

(ஐ-3-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் உள் விவகாரத்தில் ஐ. நா. தலையிட வேண்டியதில்லை

## இலங்கைத் தூதர் அறிவிப்பு

கொழும்பு, நவ. 23

இலங்கையின் உள் நாட்டு அரசியல் தகராறுகளில் தலையிடுவதற்கு ஐ. நா. சபைக்கு எந்தவிதமான பங்களிப்பும் இல்லை என்று இலங்கை சூசகமாக ஐ. நா. சபைக்குத் தெரிவித்துள்ளது.

அரச சார்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது.

''அரசியல் பேச்சுவார்த்தை மூலம் சமாசத் தீர்வு காணும் தேசிய சமரதான முயற்சிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கப்பட வேண்டியது மிக முக்கியமாகும். அத்தகைய அரசியல் முயற்சிகளை ஊக்குவிப்பதே இராஜதந்திர அடிப்படையிலான முக்கிய பணியாக இருக்க வேண்டும்.'' — இவ்வாறு ஐ. நா. சபையில் உள்ள இலங்கையின் நிரந்தரப் (பிரதிப்) பிரதிநிதி நிகால் றொட்றிக்கே தெரிவித்தார்.

''ஐ. நா. சபை தலையிடுவதற்கு இரு காரணங்கள் தேவை,

முதலாவதாக சர்வதேச சமாதானம், பாதுகாப்பு ஆகியவற்றுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் ஐ. நா. சபை தலையிடலாம்.

''இரண்டாவதாக, பொது அங்கத்தவர்களின் பூரண ஆதரவுடன் பாதுகாப்புச் சபையின் முடிவுகளின் பேரில் தலையிடலாம்.'' — இவ்வாறு ஐ. நாவுக்கான இலங்கைத் தூதர் நிகால் றொட்றிக்கோ மேலும் குறிப்பிட்டார்.

அமைதி காக்கும் நடவடிக்கைகளின் முக்கிய அம்சங்களையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இறைமை, பிராந்திய ஒருமைப்பாடு, அரச சுதந்திரம், உள்நாட்டு அலுவல்களில் தலையிடாமை என்பவையே அவை — என்றார் அவர்.

ஐ. நாவின் அமைதி காக்கும் படை இனவன் செயல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பளிக்கத் தவறிவிட்டது எனச் சுட்டிக்காட்டிய அவர் —

இதன் காரணமாக ஐ. நாவின் அமைதி காக்கும் பணி குறித்து அங்கத்துவ நாடுகளிடையே மனக்கிலேசம் ஏற்பட்டுள்ளது — என்றும் கூறியுள்ளார்.

இவ்வாறு அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (உ)

## விண்ணப்ப முடிவு திகதி

சாவகச்சேரி, நவ. 23

தமிழீழ வைப்பகத்தில் சகல பணிநிலைகளுக்குமாக அண்மையில் கோரப்பட்ட வேண்டுகைகளுக்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதிதினம் எதிர்வரும் 30 ஆம் திகதி ஆகும் என பணிப்பாளர் அறிவித்துள்ளர்.

இதற்கான முடிவுத் திகதி முன்னர் கடந்த 5 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டதும் பின்னர் திகதி குறிப்பிடாமல் அது நீடிக்கப்பட்டதும் தெரிந்ததே. (ஐ)


உதயன்

## விற்பனை முகவர்களுக்கு

இடம்பெயர்ந்துள்ள உதயன் விற்பனை முகவர்கள் உட்பட அனைத்து விற்பனை முகவர்களையும் எதிர்வரும் திங்கட்கிழமை (27-11-95) காலை 10.30 மணிக்கு எங்கள் பணிமனைக்கு தவறாது வருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்

நிர்வாகத்தினர்

உதயன் பணிமனை,
பருத்தித்துறை வீதி,
(கனகம்புளியடிச் சந்திக்கு அருகாமையில்)
சரசாலை



## அறிவித்தல்

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

மேற்படி சங்கம் தற்போது கீழ்காணும் விலாசத்தில் இயங்கி வருகிறது.

பருத்தித்துறை வீதி
கொடிகாமம்.
(கொடிகாமம் சந்தியில் இருந்து அரைமைல்)

சகல பணியாளர்களும் உடனடியாகக் கடமைக்குச் சமுகமளித்தல் வேண்டும் என்பதை அறியத்தருகிறேன்.

(39274) பொது முகாமையாளர்



## அறிவித்தல்

சேரன் வேளாண் இடுபொருள் வாணிபத்தின் வாடிக்கையாளர்கள் அனைவரையும் எமது நிறுவனத்துடனான சகல கொடுக்கல், வாங்கல் நிலுவைகளையும் உறுதி செய்யுமுகமாக 24-11-1995 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரியில் அமைந்திருக்கும் எமது பணிமனைக்கு சமுகமளிக்குமாறு வேண்டிக்கொள்கிறோம். எமது விற்பனைத் தொடர்பாளரான திரு. எமிடியூஸ் அவர்களையும் தவறாது சமுகமளிக்கும்வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

நிர்வாகம்,
சேரன் பல்பொருள் வாணிபம்.

குறிப்பு: சேரன் சாவகச்சேரி கிளை நிறுவனத்தினூடாக எமது பணிமனைக்கு தொடர்பு கொள்ளவும்.

(39365)



## உதயன் செய்தியாளருக்கு

இடம்பெயர்ந்து தென்மராட்சி' வடமராட்சிப் பகுதிகளில் வதியும் உதயன் பிரதேசச் செய்தியாளர்களையும், மற்றும் அனைத்துப் பகுதிச் செய்தியாளர்களையும் எதிர்வரும் திங்கட்கிழமை (24-11-95) காலை 10.30 மணிக்கு உதயன் பணிமனைக்கு தவறாது சமூகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நிர்வாகத்தினர்.

உதயன் பணிமனை,
பருத்தித்துறை வீதி,
(கனகம் புளியடிச் சந்திக்குச் சமீபமாக)
சரசாலை.



அச்சுவேலி பனை.தெ.வ.அ.கூ.சங்கம்

## முக்கிய அறிவித்தல்

மேற்படி எமது சங்கம் தற்போதைய நெருக்கடி நிலைமை காரணமாக சாவகச்சேரி பனை.தெ.வ.அ.கூ. சங்க காரியாலயத்திற்கு அருகாமையில் உள்ள கட்டடத்தில் இயங்கிவருகிறது. சகல நிரந்தர பணியாளர்களையும் 25-11 95 ஆம் திகதி மேற்படி காரியாலயத்திற்கு கடமைக்கு சமுகமளிக்கும்வண்ணம் கேட்டுக்கொள்கின்றேன்.

— பொதுமுகாமையாளர்

[39364]


## கலந்துரையாடல்

சாவகச்சேரி, நவ. 23

மக்கள் நலன்புரிச் சங்க நிர்வாக உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் சாவகச்சேரி மக்கள் வங்கிக்கு அருகில் உள்ள நலன்புரிச்சங்க தலையகத்தில் இன்று வியாழன் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஐ)

## பொதுசன உதவிப் பணம்

சாவகச்சேரி, நவ. 23

யாழ் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த மாதாந்த உதவிப் பணம், புற்றுநோய், குஷ்டரோக மாதாந்தஉதவிப் பணம் பெறுபவர்கள் தங்கள் பணம் பெறும் அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் சாவகச்சேரி இந்துக் கல்லூரிரியில் இயங்கும் மாவட்ட செயலகத்திற்குஎதிர் வரும் திங்கட்கிழமைகாமை 9 மணிக்குசகமுமளித்து அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பென்சன் வவுச்சர்கள் வந்தன

சாவகச்சேரி, நவ. 23

யாழ். மவாட்ட ஓய்வூதியர்களின் இம் மாதத்துக்கான பென்சன் வவுச்சர்கள் நேற்று குமண கப்பலில் எடுத்துவரப்பட்டன. அத்துடன் ஒரு தொகுதி தேசிய அடையாள அடைகளும் வந்து சேர்ந்தன.

யாழ். அரச அதிபர் திரு. செ.பத்மநாதன் பருத்தித்துறை துறைமுகத்தில் வைத்து அவற்றைப்பொறுப் பேற்றார்'

ஆயிரத்து 700 மெற்றிக் தொன் அரிசியும், ஆயிரத்து 500 மெற்றிக் தொன் மாவும் இக் கப்பலில் வந்து சேர்ந்தன. (ஐ-173)

## சிமெந்து ஊழியர் சம்பளம்

சாவகச்சேரி, நவ. 23

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான ஒக்டோபர் மாத சம்பளம் சாவகச்சேரி உதவி அரச அதிபர் பணிமனையில் வழங்கப்பட்டு வருவதாக கூட்டுத்தாபன [illegible] அறிவித்துள்ளார். (ஐ)

## இடம்பெயர்ந்தோரில் 50 வீதத்தினர் வன்னிக்கு

சாவகச்சேரி, நவ. 23

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் தங்கியிருந்தவர்களில் 50 சதவீதமானோர் வன்னிக்கு சென்றுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்த சுமார் 5 லட்சம் மக்களில் கடந்த செவ்வாய்கிழமை வரை இரண்டரை லட்சம் பேர் வன்னிக்கு சென்றுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வன்னி சென்றுள்ள மக்களுக்கான நிவாரணப் பணிகளைத் துரிதமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-3)

## 595 தபால் பொதிகளே நேற்று குமணவில் வந்தன

நேற்று நண்பகல் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்த 'குமண' கப்பலில் 595 தபால் பொதிகளே எடுத்துவரப்பட்டுள்ளன.

இக்கப்பலில் ஆயிரம் தபால் பொதிகள் எடுத்துவரப்படுவதாக முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நேற்று வந்தடைந்த தபால் பொதிகளில் வடமராட்சிப் பகுதிக்குரியவை தவிர்ந்த ஏனையவை தென்மராட்சிக்கு எடுத்து வரப்பட்டு விநியோகிக்கப்படவுள்ளன.

தென்மராட்சி பகுதிக்கான தபால்கள் தபாலகங்கள் ஊடாக நாளை விநியோகிக்கப்படும்.

வலிகாமம் பகுதி மக்களுக்கான கடிதங்கள் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் அமைக்கப்படும் விசேட கரும பீடங்களில் வைத்து நாளை முதல் நேரில் விநியோகிக்கப்படும்.

நேற்று வந்து சேர்ந்த தபால் பொதிகள் கடந்த நான்கு மாதகாலத்துக்கு முந்தியவை என்றும் —

வெளிநாட்டுத் தபால்களும் பதிவுத் தபால்களும் அடங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

[ஐ-3-173]

## ஓய்வூதியம் வழங்க விசேட ஏற்பாடுகள்

சாவகச்சேரி, நவ. 23

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களுக்கு இம் மாத ஓய்வூதியத்தை வழங்க விசேட ஏற்பாடுகள் யாழ். செயலகத்தால் மேற் கொள்ளப்பட்டிருப்பதாக யாழ். அரச அதிபர் திரு.செ. பத்மநாதன் தெரிவித்தார்

'குமண' கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட ஓய்வூதிய வவுச்சர்கள் நேற்று சாவகச்சேரியில் இயங்கும் யாழ். செயகத்துக்குக் கொண்டு வரப்பட்டன.

ஓய்வூதிய கொடுப்பனவை வழங்குவது தொடர்பான நடைமுறைகள் வருமாறு:-

★ வடமராட்சி, தென்மராட்சியைச் சேர்ந்த ஓய்வூதியர்களின் வவுச்சர்கள் தபால் மூலம் அனுப்பப்படும்.

★ வலிகாமத்தில் கிராமிய வங்கிகளில் ஓய்வூதியம் பெற்றவர்கள் தமது ஓய்வூதியத்தை நாளை வெள்ளிக்கிழமை முதல் இடம் பெயர்ந்துள்ள தமது கிராமிய வங்கிகளில் பெறலாம்.

★ கிராமிய வங்கிகள் தவிர்ந்த ஏனைய வங்கிகளில் ஓய்வூதியம் பெறுவர்களுக்கான கொடுப்பனவு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இயங்கும் யாழ். செயலகத்தில் அமைக்கப்படும் விசேட கரும பீடங்களில் வைத்து நாளை முதல் காசாக வழங்கப்படும்.

சயலக ஊழியர்கள் இந்தப் பணியை மேற்கொள்வர். (ஐ-3)


## அறிவித்தல்

யாழ்ப்பாணம் சேரன் பல் பொருள் வாணிபத்தின் சகல வாடிக்கையாளர்களும், எம்முடனான கொடுக்கல் வாங்கல் நிலுவைகளை சாவகச்சேரியில் அமைந்திருக்கும் எமது பணிமனையில் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நிர்வாகம்,
சேரன் பல்பொருள் வாணிபம்

குறிப்பு:- சேரன் சாவகச்சேரி கிளை நிறுவனத்தினூடாக எமது பணிமகைக்கு தொடர்பு கொள்ளவும்.

(39366)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர்ந்தோருக்கு உதவும் வலயங்கள் இயங்க ஆரம்பம்

தென்மராட்சி, நவ.23

வலிகாமம் பகுதியிலிருந்து தென்மராட்சிப் பிரிவில் தங்கியுள்ள மக்களின் முகாம் பராமரிப்பு, இடம்பெயர்ந்தோர் நிவாரணம் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு தென்மராட்சிப் பிரிவு சாவகச்சேரி நகர், கைதடி, மட்டுவில், வரணி, கொடிகாமம் என ஐந்து வலயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வலயத்துக்கும் மேலதிக பிரதேச செயலர்கள் நியமிக்கப்பட்டு அந்த வலயங்கள் நேற்றுமுன்தினம் முதல் இயங்கத் தொடங்கியுள்ளன.

ஒவ்வொரு வலயத்திலும் உள்ள இடம்பெயர்ந்த மக்கள் தத்தமது பிரிவில் உள்ள வலய அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகர் வலயப் பணிமனை சாவகச்சேரி பெற்றோல் நிலைய சந்தியில் உள்ள கட்டடத்திலும் —

கைதடி வலைப் பணிமனை கைதடி கிராம சபை கட்டடத்திலும்—

மட்டுவில் வலயப் பணிமனை சரசாலை கிராமசபை கட்டடத்திலும் —

வரணி வலயப்பணிமனை வரணி கிராம சபை கட்டடத்திலும்—

கொடிகாமம் வலயப்பணிமனை மிருசுவில் கிராமசபை கட்டடத்திலும் இயங்குகின்றன.

சாவகச்சேரி நகரப் பிரிவுக்கு ஆ. மகாலிங்கமும்—

கைதடிப் பிரிவுக்கு திரு. க. கேதிஸ்வரனும் —

மட்டுவில் பிரிவுக்கு திரு. து. வைத்திலிங்கமும் —

வரணிப் பிரிவுக்கு திரு. ந. வேதநாயகனும்—

கொடிகாமம் பிரிவுக்கு திரு. க. சந்திரராசாவும் மேலதிக பிரதேச செயலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

முகாம் பராமரிப்பு, நிவாரண வேலைகள் தவிர்ந்த நிர்வாகக் கடமைகளை தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை கவனித்து வருகிறார்.

(இ-117)

## வயிற்றோட்ட நோயினால் ஐவர் மரணம்

தென்மராட்சி, நவ. 23

வயிற்றோட்ட நோயினால் வயோதிபர்கள் பலர் சாவகச்சேரி ஆஸ்ப்பத்திரியில் தினமும் மரணமாகி வருகின்றனர்.

கடந்த வாரத்தில் மட்டும் 5 வயோதிபர்கள் வயிற்றோட்ட நோய்க்கு பலியானதாக வைத்தியசாலைபுள்ளி விவரங்களில் இருந்து தெரிய வந்துள்ளது. (ஐ-117)

## முதல் கட்டநடவடிக்கை சில தினங்களில் பூர்த்தி

யாழ்ப்பாணம், நவ. 23

யாழ்ப்பாண குடாநாட்டை விடுதலைப் புலிகளிடம் இருந்து விடுவிக்கும் முதலாவது கட்ட நடவடிக்கை இன்னும் சில தினங்களில பூர்த்தியடைந்து விடும்.

அரசாங்கம் இதனை ஒரு சில மாதங்களில் நிறைவேற்றியுள்ளது பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்தரத்வத்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் மக்கள் தமது வீடுகளில் அமைதியாக வாழ்வதற்குரிய சூழ்நிலையை உருவாக்குவதே அரசின் அடுத்த திட்டமாகும் என்றும் அவர் கூறினார். (இ-3)

## வைப்பகத்துக்கு வருமாறு அறிவிப்பு

சாவகச்சேரி, நவ. 23

நாளை 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பின்வருவோரை கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்துக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு நிதித்துறையினர் கோரி உள்ளனர்.

1. முருகேசு கமலவேணி, 'ஆனந்தகானம்' ஆவரங்கால், புத்தூர்.

2. மரியநாயகம் இலங்கை நாயகி, கலக்சி லேன், மானிப்பாய் (இ)

## விளையாட்டு அதிகாரி பதவி: விண்ணப்பம் அனுப்பலாம்

பருத்தித்துறை, நவ. 23

வடக்கு — கிழக்கு மாகாண கல்வி, கலாசார விளையாட்டுத்துறை அமைச்சினால் விளையாட்டு உத்தியோகத்தர்கள் பதவி ஆட்சேர்ப்பு பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு உட்பட்ட எட்டு மாவட்டங்களிலும் இருந்து விண்ணப்பங்களை அனுப்பலாம்.

விண்ணப்பிப்பதற்கான முக்கிய தகைமைகள் வருமாறு:-

★ வயதெல்லை 20 முதல் 45 வரை.

★ ஜி. சீ. ஈ. [சாதாரண] தரப் பரீட்சையில் இரு அமர்வுகளில் மொழி மற்றும் கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி அல்லது அவை ஒத்த மேற்பட்ட பரீட்சையில் சித்தி; அத்துடன் —

விளையாட்டுத்துறையில் தேசிய மட்டத்தில் பிரதிநிதித்துவம் அல்லது —

விளையாட்டு/உடற் கல்வி தொடர்பாக — அங்கீகரிக்கப்பட்ட — நிறுவனம் ஒன்றில் ஆறு மாத பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்தமை அல்லது —

அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனம் ஒன்றில் விளையாட்டு ஆசிரியராக ஐந்து வருட அனுபவம் அல்லது —

விளையாட்டு அமைச்சினால் நடத்தப்படும் தேசிய பொது விளையாட்டு விழா ஒன்றில் மாவட்ட மட்டத்தில் முதலாம், இரண்டாம் இடம் பெற்றமை அல்லது தேசிய கழகங்களினால் நடத்தப்படும் தேசிய மட்டத்திலான போட்டிகளில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றமை.

★ விண்ணப்பக் கட்டணம் இருநூறு ரூபா.

★ விண்ணப்ப முடிவு தினம் 1995 நவம்பர் 30 ஆம் திகதி.

மாதிரி விண்ணப்பப் படிவம் மற்றும் ஆட்சேர்ப்புப் பரீட்சை பற்றிய அறிவித்தலை வழமையான வேலை நேரங்களில் சாவகச்சேரி நவீன சந்தை மேல்மாடியில் 9 ஆம் இலக்கத்தில் உள்ள ''உதயன்'' கிளை நிலையத்தில் பார்வையிடலாம்

(உ-118)

## ஹட்டனில் இரு யுவதிகள் உட்பட 18 பேர் கைது

கொழும்பு, நவ. 23

ஹட்டனில் படையினர் கடந்த ஞாயிறன்று மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பு தேடுதலில் இரண்டு யுவதிகள் உட்பட 18 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.

பொலீஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் பேரில் ஹட்டன் நகர் பகுதியை படையினர் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தினர்.

தமிழர்கள் அனைவரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

சரியான தகவல்களை தெரிவிக்காத — அடையாள அட்டை இல்லாத — 2 யுவதிகள் உட்பட 18 பேரை படையினர் கைது செய்து விசாரணைக்கு அழைத்துச் சென்றனர். (இ-3)

## கிளாலியூடாக செல்வோர் எண்ணிக்கை அதிகரிப்பு

தென்மராட்சி, நவ. 23

தென்மராட்சி, மற்றும் வடமராட்சி பகுதிகளில் இருந்து கிளாலி ஊடாக கிளிநொச்சிக்கும் வன்னிப் பெருநிலப்பரப்புக்கும் செல்லும் மக்களின் எண்ணிக்கை கடந்த சில நாட்களாக அதிகரித்துள்ளது.

கிளாலி ஊடாகச் செல்வதற்காக நேற்று முன் தினம் மட்டும் சுமார் 7 ஆயிரம் பேர் கிளாலி கரையில் காத்திருந்தனர்.

தமது பொருள்களுடன் வாகனங்களிலும், கால் நடையாகவும் மக்கள் தினமும் கிளாலிக்குச் செல்வதைக் காணமுடிகிறது.

[ஐ-117]

## தட்டுப்பாடின்றி மக்களுக்கு பாண் கிடைக்கச் செய்ய நடவடிக்கை

சாவகச்சேரி, நவ. 23

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு பாண் கிடைக்க உதவும் முகமாக புதிய நடைமுறைகள் அமுல் செய்யப்படுகின்றன.

யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கத் தலைவர் திரு. த. சிவசுப்பிரமணியம் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

சாவகச்சேரியில் நடந்த சங்கத்தின் கூட்டத்தில் அவர் இந்த புதிய நடைமுறைகள் பற்றி அறிவித்தார்.

★ மக்கள் தமக்கு தேவையான பாணைப் பெற வசதியாக பாண் உற்பத்தியில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். பணிஸ், கேக் ஆகியவற்றை தயாரிப்பதை உடன் நிறுத்த வேண்டும்.

★ வெதுப்பக உரிமையாளர்கள் அயலிலுள்ள வெதுப்பகத்தை சோதனை செய்ய வேண்டும். வழங்கப்படும் மா முழுவதும் பாண் உற்பத்திக்கு பயன்படுத்தப்படுகின்றதா? என்பதைக் கண்டறிய வேண்டும்.

★ பாணின் தரம் குறித்தும், பாவணையாளர் பிரச்சினை குறித்தும் கேட்டறிய வேண்டும்.

இந்த நடைமுறையின் பலனாக பாண் உற்பத்தியை அதிகரிக்க முடியும் — என்று அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

தென்மராட்சியில் செயற்படும் 21 வெதுப்பகங்கள் மூலமாகவும் —

வடமராட்சியில் செயற்படும் 28 வெதுப்பகங்கள் மூலமாகவும் — போதிய பாணை உற்பத்தி செய்ய முடியாதுள்ளதாக தெரிவித்த அவர் கடந்தகாலங்களிலும் பார்க்க பாண் உற்பத்தி மூன்று மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

(இ-3)

## புனர்வாழ்வுக் கழக பராமரிப்பில் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட அகதிகள்

### தென்மராட்சியில் 150 முகாம்கள்

சாவகச்சேரி, நவ. 22

தமிழர் புனர்வாழ்வுக் கழகம், 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 2 லட்சத்துக்கும் மேற்பட்ட இடம்பெயர்ந்தோரைத் தற்போது பராமரித்து வருகிறது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் பராமரிக்கப்படும் முகாம்களில் 150 முகாம்கள் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவிலும்—

8 முகாம்கள் வடமராட்சிப் பிரிவில் கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுகளிலும்—

24 முகாம்கள் கிளிநொச்சி மாவட்டம் பளைப் பகுதியிலும்—

50 க்கு மேற்பட்ட முகாம்கள் வன்னிப் பகுதியிலும் உள்ளன.

இந்தவகையில் உணவுவசதி, சுகாதாரவசதி, குடிநீர்வசதி ஆகியவற்றையும்—

அடிப்படை வசதிகளான உடை, பாவனைப்பொருள்கள் ஆகியவற்றையும்—

குழந்தைகளுக்கான போசாக்குணவு, இருப்பிட வசதிகள், மக்களுக்கான போக்குவரத்து வசதிகள், சமூக உளத் தேவைகள் போன்றவற்றையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முழுமையாக மேற்கொண்டு வருகிறது!

ஒவ்வொரு இடம்பெயர்ந்தோர் முகாமிலும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தொண்டர்கள் தினமும் 24 மணிநேர சேவையை வழங்குவதில் முன்னின்று உழைக்கின்றனர்.

அத்துடன் இடம்பெயர்ந்து அவலத்துக்குள்ளாகி, துன்ப துயரங்களை சுமந்து வந்த மக்களை வழிகாட்டி, அவர்களுக்கு ஆறுதலளித்து, அவர்களை அரவணைப்பதில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தில் தொண்டர்கள் முழுமையாக ஈடுபடுகின்றனர்.

இந்தநிலையில் உறவுகளைப் பிரிந்து, ஆதரவற்றவராகியிருந்த சுமார் 400க்கு மேற்பட்ட முதியோர்களை கைதடிப் பகுதியில் தங்க வைத்துப் பராமரிக்கும் சேவையிலும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உதவிகளை வழங்குகின்றது.

இப் புனர்வாழ்வுப் பணியில் சகல நிர்வாக அலகுகளுடனும் இணைந்து செயற்படுவதிலும்—

இடம்பெயர்ந்த மக்களின் தகவல்களைத் திரட்டி ஒரு தகவல்மையமாக செயற்படுவதிலும் — திறமைமுகுந்த ஸ்தாபனமாக அது செயற்பட்டு குறைந்தவளத்துடன் நிறைவான சேவையை வழங்கிவருகின்றது — இவ்வாறு அதன் செய்திகள் [illegible] (இ)

## மண்ணைக் காக்க பூணுவீர் வீரம்

முப்படையும் வெள்ளம் போல்
நிற்கும் போரில்
முனைப்புடனே செல்கின்ற
ஆண்மை வீரம்!

பயம் நிறைந்த மனத்தினது
அச்சம் போக்கி
கரத்தினிலே துப்பாக்கி
ஏந்தல் வீரம்!

காதகரால் தமிழ் மண்ணின்
சிதைவு கண்டும்
படை அணியினிலே இணையத்
தயக்கம் ஏனோ?

சாதலுக்கும் அஞ்சாதே
தமிழ் மண்ணைக் காக்க
தரணியில் நாம் பூணும்
வீரமே அதனைக் காக்கும்!

— குணசீலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெயர்ந்தோர் பராமரிப்பில்

# புனர்வாழ்வு கழகத்துடன் இணைந்து தொண்டர் நிறுவனங்கள் இயங்கும்

தென்மராட்சி, நவ. 23

தென்மராட்சிப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள நலனோம்பு நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் சுகாதாரம். குடிதண்ணீர், உணவு, இருப்பிடவசதிகளைக் கவனிக்க யாழ்ப்பாணத்திலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்து செயற்பட முடிவாகி உள்ளது.

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடந்த இந்த நிறுவனங்களின் கலந்துரையாடலில் இது சம்பந்தமாக தீர்மானிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் சுகாதாரம் மற்றும் தண்ணீர் வசதிகளை கெயர், போரூட், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், மனித முன்னேற்ற நடுநிலையம், பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகம், சிறுவர் பாதுகாப்பு நிதியம், அறவழி போராட்டக் குழு. வடக்கு - கிழக்கு அபிவிருத்தி நிறுவனம் ஆகியவையும் —

உணவு வசதிகளை ரெட்பார்னா, கெயர், போரூட், சிறுவர் பாதுகாப்பு நிதியம், மெதடிஸ்த திருச்சபை, பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகம். வடக்கு கிழக்கு அபிவிருத்தி நிறுவனம், அறவழிபோராட்டக்குழு ஆகியவையும் —

இருப்பிட வசதிகளை கெயர், ரெட்பார்னா, வடக்கு கிழக்கு அபிவிருத்தி நிறுவனம், தென்னிந்திய திருச்சபை, போரூட், சிறுவர் பாதுகாப்பு நிதியம், பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகம் ஆகியவையும் —

சிறுவர் போசாக்கும் மனவளர்ச்சியும் திட்டத்தை ரெட்பார்னா, வடக்கு கிழக்கு அபிவிருத்தி நிறுவனம், பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகம் ஆகியவையும் செயற்படுத்த உள்ளன. (இ-117)

# வங்கிகள் இயங்காததால் பணம் பெறமுடியாது அவதி

தென்மராட்சி, நவ. 23

யாழ்ப்பாணத்தில் இயங்கிய இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகியவை இன்னும் இயங்காததால் பலர் பணம் பெற முடியாதுள்ளது

குறிப்பாக ஒக்ரோபர் மாத சம்பளக் காசோலையை மாற்ற முடியாமல் ஊழியர்கள் திண்டாடுகின்றனர்.

வங்கிகள் இயங்காததால் கடைகளில் கூட காசோலைகளை மாற்ற முடியவில்லை எனப் பலரும் தெரிவிக்கின்றனர். (இ-117)

# குளங்களுக்கும் குளோரின் பவுடர்

## சுகாதாரப் பகுதியிடம் கோரிக்கை

தென்மராட்சி, நவ. 23

தென்மராட்சிப் பகுதியில் உள்ள சில குளங்களில் மழையினால் ஓரளவு தண்ணீர் நிற்கிறது. இந்த குளங்களில் குளோரின் பவுடரைப் போடுவது மூலம் இடம் பெயர்ந்த மக்கள் இவற்றை பயன்படுத்த வாய்ப்பு ஏற்படும் என்று பொது அமைப்புகளினால் சுகாதாரப் பகுதியினருக்கு ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சியில் வயிற்றோட்டம் போன்ற தொற்று நோய்களைத் தவிர்ப்பதற்காக பொதுக் கிணறுகளில் குளோரின் போடுமாறும் கோரப்பட்டுள்ளது. (இ-117)

# விமான தாக்குதல்களால் கரையோர பகுதி மக்கள் பெருமளவு இடம்பெயர்வு

## பலர் வன்னி செல்கின்றனர்

கரணவாய், நவ. 23

ஸ்ரீலங்கா படையினரின் தொடர்ச்சியான விமானத் தாக்குதல்களினால் வடமராட்சிப் பகுதியில் இருந்தும் மக்கள் இடம்பெயருகின்றனர்.

இடம்பெயர்வோரில் பெரும்பாலானோர் வன்னிப்பகுதிக்குச் செல்கின்றனர். வடமராட்சியின் கரையோரப் பகுதிகளில் இருந்தே பெரும்பாலானோர் இடம்பெயர்ந்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த திங்கட் கிழமை வல்வெட்டியிலும் செவ்வாய்க்கிழமை பொலிகண்டியிலும் புக்கரா நடத்திய குண்டு வீச்சில் மொத்தம் ஆறு பேர் கொல்லப்பட்டது தெரிந்ததே.

அடுத்தடுத்து நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களை அடுத்து கரையோரப் பகுதி மக்கள் மத்தியில்பதற்றம் நிலவுகிறது. (இ-80)

# ஆசிரியர் சம்பளத்தை பணமாக வழங்க முயற்சி

எழுதுமட்டுவாழ், நவ. 23

ஆசிரியர்களுக்கான நவம்பர் மாதச் சம்பளத்தை பணமாக வழங்குவதற்கு யாழ். கல்வித்திணைக்களம் முயற்சி எடுத்து வருகின்றது.

காசோலையாக சம்பளம் வழங்குவதற்கான சகல ஏற்பாடுகளும் நடைபெற்று முடிந்து விட்ட நிலையில் —

சம்பளத்தை பணமாக வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதால் சம்பளம் வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாக கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்னும் இரண்டொரு தினங்களில் சம்பளம் வழங்கப்படலாம் எனவும் —

சம்பளம் வழங்குவது பற்றிய அறிவித்தலை பத்திரிகைகளில் பார்த்தபின் கல்வித்திணைக்களத்துடனோ அல்லது பாடசாலை அதிபர்களுடனோ தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டது. (இ 152)

# கொட்டில்கள் அமைப்பதற்கு ரயில் பாதை ஓர மரங்கள் தறிக்கப்படுகின்றன

தென்மராட்சி, நவ. 23

சாவகச்சேரியிலிருந்து பளை வரையிலான கண்டி வீதியில் ரயில் பாதை ஓரமாக காணப்பட்ட மரங்கள் இடம் பெயர்ந்த மக்களால் தறிக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மரங்களைப் பயன்படுத்தி கண்டி வீதியின் இரு மருங்கிலும் உள்ள வெற்று நிலங்களில் கொட்டில்கள் அமைக்கும் பணியில் இடம் பெயர்ந்த மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த கொட்டில்களில் பல தேநீர் கடைகளாக இயங்குகின்றன. சில கொட்டில்களில் சவர்க்காரம் போன்ற அத்தியாவசியப் பொருள்களும் மரக்கறி, தேங்காய் ஆகியவையும் விற்கப்படுகின்றன. சில கொட்டில்கள் இருப்பிடங்களாகவும் பயன்படுத்தப்படுகின்றன. (இ-117)

# வங்காள விரிகுடாவில் தாழமுக்கம்

கொழும்பு, நவ. 23

வங்காள விரிகுடாவில் இலங்கையின் கிழக்கு கரைக்கு அப்பால் 650 கிலோ மீற்றர் தொலைவில் தாழமுக்கம் காணப்படுவதாக வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

தாழமுக்கம் மேற்கு, வடமேற்கு திசையில் நகரும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும்—

கிழக்கிலும் ஊவாவிலும் காலநிலை சீராக இருக்காது என்றும் தெரிவிக்கப்படுகிறது (இ)

# இலைக் கஞ்சி

இராணுவ நடவடிக்கை காரணமாக வலிகாமம் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து நாவற்குழி, கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகளிலும், முகாம்களிலும் தங்கியுள்ள மக்களுக்கு கிராமிய உற்பத்திக்குழுப் பகுதியால் மதிய உணவாக இலைக் கஞ்சி வழங்கப்பட்டுவருகின்றது.


## சமூக அபிவிருத்தி மன்ற முக்கிய அறிவித்தல்

எமது சமூக அபிவிருத்தி மன்றமானது திரு. இ. வேலாயுதபிள்ளை (பலாலி) துளசி வீதி 'குடமியன்' வரணி என்னும் முகவரியில் இயங்கி வருகின்றது என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

எதிர்வரும் 25 – 11 – 95 சனிக்கிழமை காலை 10 மணிக்கு பொதுக் கூட்டமும் அதனைத் தொடர்ந்து நிர்வாகசபைக் கூட்டமும் நடைபெறும். ஆகவே இவ் அறிவித்தலை ஏற்று சேமிப்புக்கழக நிர்வாக உறுப்பினர்கள், மன்ற பணிப்பாளர்கள், அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நிர்வாகச் செயலாளர்

(39360)


# செஞ்சிலுவை சிகிச்சை நிலையம்

தென்மராட்சி, நவ. 23

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையினர் மீசாலையில் சிகிச்சை முகாமில் இலவச மருத்துவ சேவையினை வழங்கி வருகின்றனர்.

இச் சிகிச்சை முகாமில் தினமும் ஐந்நூற்றுக்கு மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் சாவகச்சேரி நகர்பகுதி மற்றும் வடமராட்சிப் பகுதியில் உள்ள நலனோம்பு நிலையங்களுக்கு நேரடியாகச் சென்று மருத்துவ சிகிச்சையினை அவர்கன் வழங்கிவருகின்றனர். (ஐ-117)

# உதவிப் பணம் பெறுவோர் பதிவு செய்க

தென்மராட்சி, நவ. 23

வலிகாமம் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பிரிவில் தங்கியுள்ள மாதாந்த உதவிப் பணம் பெறுவோர் —

காசநோய், புற்றுநோய் தொழுநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டு உதவிப் பணம் பெறுவோர் —

தென்மராட்சி பிரதேச கிராம அலுவலரிடம் உரிய கொடுப்பனவு அட்டைகள் அடையாள அட்டைகள் ஆகியவற்றைக் காட்டி பதிவு செய்துகொள்ளுமாறு தென்மராட்சி பிரதேசசெயலர் பு.சுந்தரம்பிள்ளை கோரி உள்ளார். (இ-117)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர்

**கதிரிப்பிள்ளை துரைரத்தினம்**

(முன்னாள் பருத்தித்துறை பா. உ.)

கடந்த 24 – 10-95 செவ்வாய்க்கிழமை அன்று கொழும்பில் காலமாகிய எம்குடும்ப தலைவர் அமரர் க. துரைரத்தினம் அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோர், நேரில் வரமுடியாது அனுதாபம் தெரிவித்தோர், எங்களது துயரில் பங்குகொண்டோர் அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். அத்துடன் அன்னார் யாழ். போதனா வைத்தியசாலையில் சுகவீனமுற்றிருந்த வேளைகளில் வைத்தியம் புரிந்தோர் மற்றும் வழிகளில் உதவிபுரிந்தோர் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்,

அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் 7- 11- 95 கொழும்பில் நடைபெற்றன என்பதையும் உற்றார், உறவினர், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

திருமதி இந்திராணி துரைரத்தினம்,
பிள்ளைகள், குடும்பத்தினர்
மயிலியதனை, தொண்டமனாறு

115 C. Kudahakapola north,
Ja-Ela.

(சி/81134)



## உடன் அறியத்தரவும்

சித்தன்கேணியைச் சேர்ந்த
**வை. சுந்தரராஜா**
பிறவுண் வீதி முதலாம் ஒழுங்கையைச் சேர்ந்த
**கந்தசாமி தம்பதிகளின்**
வதிவிடத்தை அறிய விரும்புகிறார்.

**செல்வம் சகோதரர்கள்**
மே/பா. வீ. ஆறுமுகம்,
சந்திரகிரி லேன்,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி

(39272)



## புங். நயி. ப. நோ. கூ. சங்கம் அறிவித்தல்

எமது சங்கத்தின் நெறியாளர் சபைக் கூட்டம் 25 - 11 - 95 சனிக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு சாவகச்சேரி நவீன சந்தை மேல்மாடிக் கட்டடத்தில் அமைந்துள்ள புங். நயி. பல. நோ. கூ. சங்கத் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும். தவறாது எமது சங்கத்தின் சகல நெறியாளர் சபை உறுப்பினர்களையும் சமூகம் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

திரு. ப. கனகலிங்கம்
தலைவர்

செல்வி செ. ஏ. செல்லத்துரை
செயலாளர்

(39273)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### நியாயப்படுத்த முடியுமா?

யாழ்ப்பாண நகரை இராணுவத்தைக் கொண்டு ஆக்கிரமிப்பதன் மூலம் விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தி விடலாம் என்று அரசு கருதியது.

யாழ்ப்பாண நகர் இன்னும் இரண்டொரு நாள்களில் ஆக்கிரமிக்கப்பட்டதும் முதற் கட்டத் தாக்குதல் முடிவடைந்துவிடும் என்று பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அனுருத்த கூறியிருக்கிறார்.

அவர் கூறுவது போல் இன்னும் இரண்டொரு நாள்களில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினாலும் இராணுவம் அங்கு நிலைகொள்ள முடியுமா என்பது வேறு விடயம்.

''சூரியப்பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையின் போர்க் களம் யாழ்ப்பாண நகரப் பகுதியே. சமர் நடந்து கொண்டிருக்கும் களத்தில் இருந்து சுமார் 25கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது வடமராட்சி.

ஆனால் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் சமரில் தமக்குப் பெரும் இழப்புகள் உண்டாகும் போதெல்லாம், வடமராட்சியிலும், தென்மராட்சியிலும் மக்கள் குடியிருப்புக்கள் மீது அகோர எறிகணை வீச்சுக்களையும், மூர்க்கத்தனமான குண்டு வீச்சுக்களையும் நடத்துகின்றனர்.

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தென்மராட்சியிலும், வடமராட்சியிலும் அடர்த்தியாக வாழ்கிறார்கள் என்பது அரசுக்கும் இராணுவத்துக்கும் நன்றாகத் தெரியும். எனினும் அப்பாவி பொதுமக்களின் உயிர்ப் பாதுகாப்புக் குறித்து அரசுக்கு எந்தவித அக்கறையும் இல்லை

தமக்கு உண்டாகும் இழப்புகளுக்கு, பழிவாங்கும் விதத்தில் தமிழ்ப் பொதுமக்களைப் கொன்று குவிப்பது ஸ்ரீலங்கா இராணுவத்தின் முக்கிய குணாம்சங்களில் ஒன்று.

விடுதலைப் புலிகளிடம் இருந்து தமிழ் மக்களை விடுவிப்பதற்காகவே போர் நடத்தப்படுவதாக உலகத்தை ஏமாற்றும் அரசாங்கம் —

அந்தப் போரினூடாகவே சமாதானத்தை அடையப் போவதாகப் பிதற்றும் அரசாங்கம் —

தமிழர் மனங்களை வென்று அவர்களின் ஆதரவைப் பெறப்போவதாகக் கூறும் அரசாங்கம் —

இராணுவத் தோல்விகளுக்காக, இழப்புகளுக்காக அப்பாவித் தமிழ் மக்களைக் கொல்வதற்குப் படையினரை அனுமதிக்கிறது.

வடமராட்சியில் கடந்த சில தினங்களாக இடைவெளி இல்லாமல் நாளாந்தம் ஷெல் வீச்சும், விமானக் குண்டு வீச்சும் நடத்தப்படுகின்றன. குழந்தைகள், வயதானவர்கள் உட்பட அப்பாவிப் பொதுமக்கள் நாளாந்தம் கொல்லப்படுகின்றனர். 13 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரையான ஒரு வாரத்தில் மட்டும் 25 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 60 பேர் படுகாயமுற்றனர்.

அரசு தூர இருந்துகொண்டு நடத்தும் எறிகணை வீச்சாலும், குண்டு வீச்சாலும் இறப்போரில் 99.9 சத வீதத்தினரும் நிராயுதபாணிகளான சிவிலியன்களே — பொதுமக்களே.

விடுதலைப்புலிகளை அழிப்பதாகவும், பலவீனப்படுத்துவதாகவும் கூறிக்கொண்டு அரசு தமிழ் மக்களையே கொன்று குவிக்கிறது. இந்த இலட்சணத்தில் தான் அது போரினூடு சமாதானத்தைக் காணப்போகிறதாம்!

# யாழ்ப்பாணம் மீதான நடவடிக்கையை இந்தியா ஆதரிப்பதாக லக்ஷ்மன் கதிர்காமர் கூறியது தவறு!

## தி.மு.கவின் எம்.பிக்களிடம் நரசிம்மராவ் தகவல்

புதுடில்லி, நவ. 23

''அப்பாவி குடி மக்களுக்கு அவலங்களைக் கொடுக்கும் எந்தவொரு இராணுவ நடவடிக்கையையும் இந்தியா ஒருபோதும் ஆதரிக்காது. இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கையை இந்தியா ஆதரிப்பதாக இலங்கை வெளியுறவு அமைச்சர் கூறியதாக தெரிவிக்கப்படும் கருத்து மிகவும் தவறானது''.

— இந்தியப் பிரதமர் வி.பி. நரசிம்மராவ் தன்னை கடந்த வாரம் புதுடில்லியில் சந்தித்த திராவிட முன்னேற்றக்கழக எம்.பிக்களிடம் இவ்வாறு தெரிவித்ததாக சென்னையில் இருந்து வெளியாகும் பிரபல ஆங்கில தினசரியான 'இந்து' செய்தி வெளியிட்டிருக்கிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளினால், அப்பாவிக் குடிமக்கள் சொல்லொணா வேதனைகளை அனுபவிப்பால், அந்த நடவடிக்கைகளை நிறுத்திவிடுமாறு இலங்கை அரசை நரசிம்மராவ் கோரவேண்டும் என வற்புறுத்துவதற்காக தி.மு கழக எம். பிக்களான பி. கிருஷ்ணன், மிசா ஆர் கணேசம், ரி. ஏ. முஹமட் சாகி ஆகியோர் அவரை சந்தித்தனர்.

அரசியல் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பித்து இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வுகாண முயற்சிக்குமாறு இலங்கை அரசை நரசிம்மராவ் கேட்டுக்கொள்ள வேண்டும் என்றும் எம்.பிக்கள் வலியுறுத்தினர்.

இது தொடர்பில் தி.மு.கவின் சார்பிலான மகஜர் ஒன்றையும் அவர்கள் பிரதமரிடம் கையளித்தனர்.

இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டு இது விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்குமாறும் பிரதமரிடம் அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

குடி மக்கள் பாதிக்கப்படுவது குறித்து இந்திய அரசு மிகுந்த அக்கறையும் விசனமும் கொண்டிருக்கிறது. இது தொடர்பில் உரிய நடவடிக்கை காலக்கிரமத்தில் மேற்கொள்ளப்படு என்றும் நரசிம்மராவ் எம் பிக்களிடம் உறுதியளித்தாக தி.மு.க விடுத்திருந்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### போராட்டத்தை ஆதரிக்க கேட்கவில்லை

இது இவ்வாறிருக்க தமிழ் நாட்டின் சேலம் மாவட்டத்தில் நாமக்கல்லில் திங்கட்கிழமை கூட்டம்ஒன்றில் உரையாற்றிய தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி இலங்கையில் இடம்பெறும் நிகழ்வுகள் குறித்து இனிமேலும் மௌனமாக இருக்க வேண்டாம் என்று நரசிம்மராவிடம் உருக்கமான வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.

புலிகளின் போராட்டத்துக்கு பிரதமர் நரசிம்மராவ் ஆதரவு வழங்க வேண்டும் என்றோ அல்லது மீண்டும் இந்தியத் துருப்புக்களை இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என்றோ நாம் விரும்பவும் இல்லை; கோரிக்கை விடுக்கவும் இல்லை. அப்பாவித் தமிழர்கள் பாதிக்கப்படக்கூடிய நிலையை உருவாக்காது இருக்குமாறு நரசிம்மராவ் குறைந்த பட்சம் கேட்கவாவது வேண்டாமா?

''இலங்கையில் உள்ள பாரதூரமான நிலைவரம் குறித்து தமிழ்நாட்டில் பொது மக்கள் அபிப்பிராயத்தை திரட்டுவதற்கு தவறியிருப்பதற்காக முதலமைச்சர் ஜெயலலிதா நிச்சயமாகக் கண்டிக்கப்பட வேண்டியவர். ஜெயலலிதா பிரதமருக்கு கடிதம் ஒன்றை வெறுமனே எழுதிவிட்டு மௌனமாக இருந்துவிட்டால் போதுமா? இலங்கைத் தமிழர்கள் மீது எமக்கு இருக்கும் பற்றுதலும் பாசமும் ஜெயலலிதாவுக்கோ நரசிம்மராவுக்கோ இல்லை'' என்று கருணாநிதி தமதுரையில் தெரிவித்தார். (உ)

யாழ்ப்பாணத்தில்

## ஒரு மாங்காயைக் கூட படையினர் தொடமாட்டார்

### அனுருத்த இப்படிக் கூறுகிறார்

கொழும்பு, நவ. 23

''வடக்கில் உள்ள மக்களின் எந்தப் பொருள்களையும் சொத்துக்களையும் படையினர் அழிக்க அல்லது ஊறுபடுத்த மாட்டார்கள் எந்த வீட்டிலோ தோட்டத்திலோ இருக்கும் ஒரு மாங்காயில் கூட அவர்கள் கைவைக்க மாட்டார்கள் என்று நான் கூறி வைக்க விரும்புகின்றேன்.''

— இவ்வாறு கூறினார் பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை.

குடாநாட்டில் பொதுமக்களின் சொத்துக்களைப் படையினர் அழித்து சூறையாடுவதாகக் கூறப்படுவதில் உண்மையுண்டா என்று கேட்டபோதே அமைச்சர் இவ்வாறு பதிலளித்ததாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தெரிவித்தது. (உ)

## நாடு கடத்த உத்தரவிடக் கோரும் மனு நீதிமன்றுக்கு

கொழும்பு, நவ. 23

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனை நாடு கடத்தும்படி உத்தரவிடக்கோரும் மனு ஒன்றை ஸ்ரீலங்காவின் சட்டமா அதிபர் ஸ்ரீலங்காவின் மேல் நீதிமன்றம் ஒன்றில் இன்னும் சில தினங்களில் சமர்ப்பிப்பார்.

— இவ்வாறு கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன், உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டம்மான், மகளிர் பிரிவுத் தலைவி அகிலா ஆகியோரை நாடு கடத்துமாறு ஸ்ரீலங்கா அரசைக் கோரும் மனுக்கள் கடந்த ஜூன் மாதம் இந்திய அரசினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

அந்த மனுக்களைப் பரிசீலனை செய்த சட்டமா அதிபர், அவை தொடர்பான தனது அவதானிப்புக்களையும் ஆலோசனைகளையும் பாதுகாப்பு அமைச்சரும் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்காவுக்கு சமர்ப்பித்துள்ளார்.

அவற்றைக் கவனத்தில் எடுத்த ஜனாதிபதி சந்திரிகா, நாடு கடத்தும் மனுக்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து உத்தரவு பெறுவதற்கான தனது அனுமதியை அளித்திருப்பதாகத் தெரியவருகின்றது.

இதனையடுத்து—

அடுத்த சில தினங்களில் மேற்படி மனுக்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருப்பதாகத் தெரியவருகின்றது

—இவ்வாறு அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (உ)

## கல்வித்துறை நியமனங்கள்

சாவகச்சேரி, நவ. 23

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி நிர்வாக கட்டமைப்பில் ஜனவரி மாதம் முதல் மேற்கொள்ளப்படவிருக்கும் மாற்றங்களின்படி நான்கு பிரதி மாகாண கல்விப்பணிப்பாளர்கள் நியமிக்கப்படவிருக்கின்றனர்.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரின் பணியை பரவலாக்கும் நோக்கத்தில் 9 மாவட்டங்களுக்கும் இந்த நியமனங்கள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

யாழ். மாவட்டத்துக்கு தற்போது வலயம் 2 கல்விப் பணிப்பாளராகப் பணிபுரியும் திரு. க. கந்தசாமியும்—

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்கு தற்போது முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளராகப் பணிபுரியும் திரு. தி. புலேந்திரனும்—

வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கு தற்போது வவுனியா கல்விப் பணிப்பாளராகப் பணிபுரியும் திரு. துரை தியாகராசாவும்—

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு தற்போது மட்டக்களப்பு கல்விப் பணிப்பாளராகப் பணிபுரிந்த திரு. எஸ். மனோகரனும்—

நியமிக்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்டத்துக்கான பணியை மாகாண கல்விப்பணிப்பாளர் செல்வி இ. பெரியதம்பியே மேற்கொள்வார்.

அம்பாறை மாவட்டத்துக்கான மாகாணப் பணிப்பாளரை நியமிப்பதில் இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

புதிய நிர்வாக அமைப்பின் கீழ் வலயப் பணிப்பாளர் நியமனங்கள் குறித்து ஆராய எதிர்வரும் 27 ஆம் திகதி திருகோணமலை மாகாண சபையில் கூட்டம் ஒன்று நடைபெறவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## பாதுகாப்பு கருதி ரயில் நிலையம் மூடப்பட்டது!

கொழும்பு, நவ. 23

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பு பிரதேசத்துக்கு வெளியே இருந்த ரயில் நிலையம் ஒன்றை பாதுகாப்புக் கருதி அரசாங்கம் மூடி விட்டது.

விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சியே இந்த ரயில் நிலையம் மூடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயத்தில் பணியாற்றும் பெரும் எண்ணிக்கையான ஊழியர்கள் இந்த ரயில் நிலையத்தையே பயன்படுத்தி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ரயில் நிலையம் மூடப்பட்டாலும் —

விமான நிலையத்துக்குத் தேவையான விமான எரிபொருள் ரயில் மூலம் டாங்கிகளில் எடுத்துவரப்பட்டு இந்த ரயில் நிலையத்தினுடாகவே விநியோகிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு எரிபொருள் டாங்கிகளுடன் வரும் ரயில்களை சீதுவையில் வைத்து சோதனையிட்டு பொறுப்பேற்கும் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட ரயில் நிலையம் வரை அதற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மண் மீட்புப் போரில் தனது ஒரே மகளை இணைத்தார் தந்தை!

### வடமராட்சி கிழக்கில் நேற்று சம்பவம்

செம்பியன்பற்று, நவ. 23

வடமராட்சி கிழக்கு மாமுனையில் தனது ஒரே மகளை மண்மீட்புப் போரில் இணைத்தார் தந்தை ஒருவர்.

இச்சம்பவம் நேற்று மாமுனை, மங்கை போசாக்கு பூங்காவில் இடம்பெற்றது.

கிஸ்னானந்தம் (வயது 40) என்பவரே தனது மகளைப் போராட்டத்தில் இணைத்த தந்தை ஆவார்.

இவரது ஒரே மக[illegible] வேணுகாதேவி 16 வயது நிரம்பிய பாடசாலை மாணவி.

தந்தையாரான கிஸ்னானந்தம் எமது செய்தியாளரிடம் தெரிவித்ததாவது:-

இன்று வெற்றிலைக்கேணி மற்றும் ஆனையிறவில் இருந்து ஏவப்படும் ஷெல்களினால் பலர் வீணாகச் சாகிறார்கள். இப்படி வீணாகச் சாவதைவிட போராடிச் சாவது மேலானது. [illegible] யினர் மாமுனைக்கு வர மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?

நாம் இன்று எமது கடமையைச் செய்யாது விட்டால் நாளை கவலைப்பட வேண்டி வரும்.

என்னைப்போன்று ஏனைய பெற்றோர்களும் தமது பிள்ளைகளை மண் மீட்புப் போரில் இணைத்தால் நாம் தினமும் அவல வாழ்வு வாழ நேரிடாது.

இப்படி அவர் கூறினார். (இ-36)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு-புலிகள் உண்மையான சமர் யாழ்.நகரில் எப்போது ஆரம்பமாகும்?

## சிவில்நிர்வாகத்துக்கு படையினர் முயற்சிக்கும் போதே

கொழும்பு, நவ. 23

விடுதலைப் புலிகளுக்கும் அரசுப் படைகளுக்கும் இடையில் உண்மையான சமர் யாழ்ப்பாண நகருக்குள் ஆரம்பிக்கப் போவதில்லை. யாழ் நகரை ஸ்ரீலங்காத் துருப்புகள் கைப்பற்றி, அங்கு சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த முயலும் போதுதான் உண்மையான யுத்தம் ஆரம்பமாகும்.

''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகையில் அதன் பாதுகாப்புச் செய்தியாளர் மற்றும் இராணுவ ஆய்வாளர் எழுதிய கட்டுரைகளில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள மற்றும் சில அம்சங்கள் வருமாறு:-

யாழ்ப்பாண நகரை ஸ்ரீலங்காப் படைகள் கைப்பற்றிய பின்னர் அடுத்தது என்ன?

விடுதலைப் புலிகள் ஐயாயிரம் வீரர்களை ஒன்றாக அனுப்பி ஒரே இரவில் இருநூற்றியைம்பது எல்லைப்புற கிராமங்களைத் தாக்க முடியும்.

ஒரே இரவில் விடுதலைப் புலிகள் தமது தற்கொலைப் படையினரைக் கொண்டு கொழும்பில் பத்து ஹோட்டல்கள் மீது தாக்குதல் நடத்தலாம்.

ஆகவே தமிழர் பிரச்சினைக்கு தனியாக இராணுவ அடிப்படையில் தீர்வு காண முயற்சிப்பது தவறானதும் பாரிய பின் விளைவுகளை ஏற்படுத்துவதாகவும் அமைந்து விடும்.

அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் தனது நிலைகளைப் பலப்படுத்த விரும்பினாலும், அங்கு துருப்புக்களை நிலை நிறுத்தி வைத்திருப்பது சாத்தியமானது அல்ல என்பதோடு அப்படிச் செய்வது எதிர்கால இராணுவ நடவடிக்கைகளையும் பாதித்து விடும்.

யாழ்ப்பாணத்துக்கு அரச துருப்புகள் வந்து சேர்ந்திருப்பது நாட்டின் சரித்திரத்தில் புதிய அத்தியாயத்தைக் குறிக்கும் என்றாலும், அந்தக் கேந்திர முக்கியத்துதம் மிக்க நகரில் இராணுவம் தரித்திருக்காமல் போகலாம் என்பதுதான் செய்தி.

— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

---

### பாதுகாப்பு...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குக் காவலாக வருவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த ரயில் நிலையத்தில் பார்த்தால்விமானங்கள் வந்து இறங்குவதும் ஏறுவதும் கண்ணுக்குத் தெரியும் என்றும்—

விமான எதிர்ப்பு ஆயுதத்துடன் இந்த ரயில் நிலையத்தில் வந்து இறங்கும் எவராலும் விமான நிலையத்துக்கு ஆபத்து உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

---

### விமானம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விநியோகிக்கும் நடவடிக்கைகளுக்கு இதுவரை காலமும் கடற்படையை நம்பியிருந்த ஸ்ரீலங்கா அரசு கடற்புலிகளின் பெரும் தாக்குதல்களை அடுத்து விநியோக வேலைகளுக்கு விமானப்படையின் உதவியை நாடவேண்டிய நிலை ஏற்பட்டது என்பது தெரிந்ததே.

இதனையடுத்து இந்த வேலைகளுக்காக உக்ரைன் நாட்டிலிருந்து அரசு மூன்று அன்ரனோவ்— 32 ரக விமானங்களைக் கொள்வவு செய்ததும்—

கடந்த ஜூலையில் கொழும்புக்கு கொண்டுவரப்பட்ட இந்த மூன்று விமானங்களில்ஒன்று நீர்கொழும்பு ஜா- எல கடல் பகுதியில் மர்மமான முறையில் விழுந்து நொருங்கி கடலுக்குள் அமிழ்ந்து போனதும் தெரிந்தவையே.

எஞ்சிய இரு விமானங்களில் ஒன்றே நேற்றிரவு காணாமல் போயிருக்கின்றது.

தற்போதைய நிலையில் — தம்மிடமிருந்த மூன்று சீனச் சகடை விமானங்களில் இரண்டையும் —

மூன்று ''அன்ரனோவ்'' விமானங்களில் இரண்டையும் —

இழந்துள்ள ஸ்ரீலங்காப் படைகள் குடாநாட்டில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள துருப்புகளுக்கு அவசர விநியோகப் பொருள்களை வழங்க முடியாதநெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது (உ)

---

### அரியாலைப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும்—

இதனால் கண்டி வீதி ஊடான போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டு விட்டதாகவும் ஸ்ரீலங்கா அரசு அறிவித்தது.

இதற்கிடையில் —

நகரை நோக்கி முன்னேறும் படையினருடன் நேருக்கு நேர் மோதி படையினருக்கு பேரிழப்பை ஏற்படுத்துவதற்காக பல நூற்றுக் கணக்கான விடுதலைப் புலிப் போராளிகள் யாழ். நகரில் காத்திருப்பதாகவும் —

அதனால் யாழ். நகரில் பெரும் போர் வெடிக்கும் சூழ்நிலை காணப்படுவதாகவும் செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது.

ஸ்ரீலங்கா அரசுத் துருப்புகளுக்கு உடனடியாக யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் எண்ணம் இல்லை என்றும் —

எனினும் யாழ்ப்பாணத்துக்கான சகல தொடர்புகளையும் துண்டிக்கச் செய்யும் வகையில் படை நகர்வுகளை மேற்கொண்டு யாழ். நகரில் மோதத் தயாராக இருக்கும் புலிகளைத் தனிமைப்படுத்துவதே அரசுப் படைகளின் திட்டம் என்றும் மற்றொரு செய்தி ஏஜென்ஸி குறிப்பிட்டது. (உ-3-6)

---

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சரஸ்வதி அருணாசலம்

புங்குடுதீவு 1 ஆம்வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற அருணாசலத்தின் அன்பு மனைவி சரஸ்வதி அவர்கள் 22-11-95 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி - அன்னப்பிள்ளையின் அன்பு மகளும், சிவானந்தராசா, சிவகுமாரி (பிரான்ஸ்), புஸ்பராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், மதிவதனா, ஜெயவீரசிங்கம் (பிரான்ஸ்). தேவி ஆகியோரின் மாமியாரும், நாகபூசணி, நடராசா, புஸ்பவதி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-11-95) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் நடைபெறும்

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கா. புஸ்பவதி
(சகோதரி)
சிறி
(மருமகன்)

இந்துமகளிர் இரண்டாம் ஒழுங்கை,
கற்குழி, சாவகச்சேரி. (39362)

## திருமதி செல்லம்மா சுப்பையா

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற பொன்னம்பலம் சுப்பையாவின் அன்பு மனைவி செல்லம்மா 22 - 11 - 95 இல் காலமாகிவிட்டார்.

இவர் தட்சணாமூர்த்தி (இளைப்பாறிய ஆசிரியர்), சொக்கநாதன் (நாதன் பிறதர்ஸ் – கொழும்பு), திவாகரமூர்த்தி (விக்னேஸ்வரா ஸ்ரோர்ஸ் – கோண்டாவில்), தில்லையம்பலம் (ஆசிரியர் - கனடா), இராசேந்திரம், இராஜசவுந்தரி, சௌபாக்கியலட்சுமி, பாலசுந்தரம் (நீர்கொழும்பு), ஸ்ரீராமச்சந்திரன் (நாதன் பிறதர்ஸ் - சுன்னாகம், நாதன் மில் - உடுவில்), சிவசுப்பிரமணியம் (அமெரிக்கா), விக்னேஸ்வரன் (நோர்வே), சண்முகராஜா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், வைடூரியம் (இளைப்பாறிய யாழ். இலங்கை வங்கி ஊழியர்), கனகசபாபதி (தபாற் கந்தோர் – கொக்குவில்), தேவி, புஸ்பவல்லி, பாக்கியலட்சுமி, சாரதா தேவி (கனடா), புனிதவதி, தங்கப்பிள்ளை, சிவனேஸ்வரி (நீர்கொழும்பு), நளினி (அமெரிக்கா), கெங்காதேவி (நோர்வே), மீனலோஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23 - 11 - 95 இன்று வரணி கற்பத்தை மயானத்தில் பி. ப. 1.00 மணியளவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சு. ஸ்ரீராமச்சந்திரன்
(நாதன்)
(மகன்)

தற்போதைய முகவரி:
மாசேரி,
வரணி வடக்கு,
வரணி. (39363)

---

# தமிழீழ மாவீரர் தினம் அனுஷ்டிக்க ஏற்பாடு

சாவகச்சேரி, நவ. 23

தமிழீழ மாவீரர் நாள் எதிர்வரும் 27 ஆம் திகதி தமிழீழம் எங்கும் அனுஷ்டிக்கப் படவுள்ளது.

இன்றைய நெருக்கடியான நிலையைக் கருத்திற்கொண்டு அமைதியான முறையில் மாவீரர் தின நிகழ்வுகள் அன்றைய தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளன.

இது தொடர்பாக யாழ். மாவட்ட மாவீரர் பணிமனை வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதன் முதலில் 1982 நவம்பர் 27 ஆம் திகதி லெப். சங்கர் [சுரேஷ்] களப் பலியானார். அந்த நாளை முன்வைத்தே 1989 நவம்பர் 27 ஆம் திகதியில் மாவீரர் நாள் முதன்முதலாகப் பிரகடனப்படுத்தி மேற்கொள்ளப் பட்டது என்பது யாவரும் அறிந்ததே.

அந்த முதலாவது மாவீரர் நாள் நடு இரவு 12-01 மணிக்குக் கோவில்கள், தேவாலயங்கள், பொதுஇடங்களிலுள்ள மணிகள் ஒலியெழுப்ப இருநிமிட அமைதி வணக்கம் செலுத்திச் சுடரேற்றி தமிழீழ மாவீரர்களின் வீரமும், ஈகமும் போற்றி கௌரவிக்கப் பட்டன.

அவ்வகையில் 1995 நவம்பர் 27 ஆம் திகதியில் லெப் சங்கர் வீரச்சாவைத் தழுவிய சரியான நேரமாகிய மாலை 6-05 மணியைக் கவனத்தில் கொண்டு இம்முறை மாவீரர் நாள் அனுஷ்டிக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

அதற்கேற்ப அனைத்துத் தமிழீழ மக்களும் தத்தமது இல்லங்களுக்கு அண்மையிலுள்ள கோவில்கள், தேவாலங்கள் பொது இடங்களிலுள்ள மணிகளை சரியாக 6-05 மணிக்கு ஒலிக்கச்செய்து இரு நிமிட அமைதி வணக்கம் செலுத்தி மாலை 6-07 மணிக்குச் சுடரேற்றி எழுச்சி பூர்வமாக, உணர்வோடு1995 நவம்பர் 27 ஆம் திகதியன்று மாவீரர்களைப் போற்றி உணர்வோடு கௌரவிக்கும் நிகழ்வு நடைபெறும்.

அன்றைய தினம் மாவீரர் துயிலும் இல்லங்களில் மாவீரர்களின் பெற்றோர் கலந்துகொண்டு சரியாக மாலை 6.05 மணிக்கு கோவில்கள், தேவாயங்கள், பொது இடங்களிலுள்ள மணிகள் ஒலியெழுப்ப இரு நிமிட அமைதி வணக்கம் செலுத்தப்பட்டு மாலை 6.07 மணிக்குச் சுடரேற்றித் தமிழீழ மாவீரர்களைப் போற்றி கௌரவிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது.

எதிரி யாழ் நகரை ஆக்கிரமிக்கத் தனது உச்சப் பலத்தைப் பிரயோகித்து முன்னேறும் முயற்சியினால் இலட்சக் கணக்கான தமிழீழ மக்கள் இடம் பெயர்ந்து இன்னலுறும் இந்நெருக்கடியான நிலையை உத்தேசித்து அனைத்து மாவீரர்களின் பெற்றோர்களையும் 1995 நவம்பர் 27 ம் திகதி தத்தமது வசிப்பிடங்களுக்கு அண்மையிலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு மாலை 4 00 மணிக்கு முன்பாசத் தாமதமின்றி வருகை தந்துதுயிலும் இல்ல நிகழ்வுகளில் தவறாது கலந்து எழுச்சியுடன் மாவீரர்களை கௌரவிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். — என்று தெரிவிக்கப் பட்டுள்ளது, [ஐ]

---

### மூன்றாம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரின் ''புக்காரா'' குண்டு வீச்சு விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கடந்த சனியன்று பலாலிக்கு அருகே படையினரின் சீனச் சகடை விமானம் ஒன்றைப் புலிகள் சுட்டு கடலில் வீழ்த்தினர்.

ஐந்தாவது விமானம் நேற்று காணாமல் போயிருக்கின்றது.

இது தவிர, அன்ரனோவ் விமானம் ஒன்று நீர்கொழும்பு ஜா-எல கடலில் மர்மமான முறையில் வீழ்ந்து அமுங்கியதும் குறிப்பிடத்தக்கது. (உ)

---

### ஐந்த...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டு வீழ்த்தியது போன்று, இந்த விமானத்தையும் பலாலி விமானத் தளத்தில் இறங்க முயன்ற சமயம் புலிகளே வீழ்த்தியிருக்க வேண்டும் எனக் கருதப்பட்டது.

இறங்குவதற்குத் தயாராகுவது பற்றி விமானக் கட்டுப்பாட்டுநிலையத்துக்கு விமானி அறிவித்துக் கொண்டிருந்த சமயம் திடீரென விமானம் காணாமல் போயிருப்பதால் அது திடீர்த் தாக்குதல் ஒன்றுக்கு இலக்காகியிருக்க வேண்டும் என ஊகிக்கப்பட்டது.

காணாமல் போன ''அன்ரனோவ்'' விமானத்தில் விமான எதிர்ப்பு ஏவுகணைகளுக்கு எதிரான ஆயுதங்கள் பொருத்தப்பட்டிருப்பதாக ஸ்ரீலங்கா அரசு அறிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும். (உ)

---

# தொழில்நுட்ப கல்லூரி மாணவருக்கு

சாவகச்சேரி, நவ. 23

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் பகல்நேர, பகுதி நேர மாணவர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-3)

# இடமாற்றம்

யாழ்ப்பாணம், நவ. 23

வலிகாமம் வடக்கு பிரதேச சபை அலுவலகம் கொடிகாமத்தில் உள்ள சாவகச்சேரி பிரதேசசபை உப பணிமனையில் இயங்கிவருகிறது. (ஐ)

---

### மற்றொரு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் உள்ள கடற்பரப்பிலேயே வீழ்ந்திருக்கக் கூடுமென விமானப்படை அதிகாரிகள் கருதுகின்றனர். (உ-6)

---

## கிளாலிப் போக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல் நடத்தப்படும் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்ததாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மூன்றாம் ஈழ யுத்தம் கடந்த ஏப்ரல் 19 ஆம் திகதி வெடித்த போதிலும் —

நேற்று வரை கிளாலிக் கடல் ஊடான போக்குவரத்தை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு சட்ட விரோதமானது எனத் தடை செய்யவில்லை.

ஆனால் யாழ்ப்பாணம் மீது பெருத்த எடுப்பில் இராணுவ நடவடிக்கை ஒன்றை ஸ்ரீலங்கா அரசு ஆரம்பித்ததை அடுத்து குடாநாட்டு மக்கள் பெரும் எண்ணிக்கையில் பாதுகாப்புத்தேடி இக் குடாக்கடல் ஊடாக வன்னிப் பெருநிலப் பரப்புக்கு இடம்பெயர்ந்து கொண்டிருக்கும் இச் சமயத்தில் இத்தடை உத்தரவை ஸ்ரீலங்கா அரசு பிரகடனப்படுத்தியிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது (உ-3)

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கி[illegible] அவர்களது தற்காலிகப் பணிமனையில் 23-11-95 இல் அச் சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org